

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (29.11.2024) சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி 2023– 2024 ஆம் ஆண்டிற்கான சட்டத் தன்னார்வ பயிற்சியாளர்களின் (Law Interns) பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு 17 தன்னார்வப் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் சட்டத் துறைச் செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டத் துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு

# கண்காணிப்பு அலுவலர் - மீட்புப் படையினர் விரைந்துள்ளனர்!

**அவசர கால செயல்பாட்டு மையத்தை ஆய்வு செய்து–அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அறிவுரை!**

சென்னை, நவ.30-

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் - கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பேரிடர் மீட்புப் படையினர் விரைந்துள்ளனர் - மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும், இது 30.11.2024 அன்று பிற்பகல் காரைக்கால் மற்றும் மகாபலிபுரத்திற்கு இடையே மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் கனமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நிலைமையை தொடர்ந்து கண்காணிக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று (29.11.2024) காலை மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்துள்ள நிலையில், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.



சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று (29.11.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வங்கக் கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

**ரெட் அலர்ட்**

நேற்று (29.11.2024) செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 20 செ.மீட்டருக்கு மேலாக அதிகனமழை பெய்யக்கூடும் என்றும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 10 செ.மீட்டருக்கு மேலாக மிககனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று (29.11.2024) காலை 8.30 மணி வரை சராசரியாக சென்னை 2.7 செ.மீ., செங்கல்பட்டு 0.76 செ.மீ., மயிலாடுதுறை 0.71 செ.மீ., திருவள்ளூர் 0.64 செ.மீ., நாகப்பட்டினம் 0.40 செ.மீ., திருவாரூர் 0.3 செ.மீ., காஞ்சிபுரம் 0.16 செ.மீ., தஞ்சாவூர் 0.09 செ.மீ., கடலூர் 0.06 செ.மீ. உள்ளிட்ட சில மாவட்டங்களில் மழை பெய்துள்ளது.

குறிப்பாக,

சென்னை - சாத்தாங்காடு 6.1 செ.மீ., எர்ணாவூர் 5.8 செ.மீ.,

செங்கல்பட்டு - பல்லாவரம் 2.92 செ.மீ., செம்மஞ்சேரி 2.4 செ.மீ.

திருவள்ளூர் - திருப்பாலைவனம் 2.56 செ.மீ., திருவெள்ளைவாயில் 2.56 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

**நிவாரண முகாம்கள்**

அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் 2229 நிவாரண மைய கட்டடங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. தற்போது திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 6 நிவாரண முகாம்களில், 164 குடும்பங்களைச் சேர்ந்த 471 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**மீட்பு உபகரணங்கள்**

| மாவட்டம் | JCB | படகுகள் | ஜெனரேட்டர்கள் | மர அறுப்பான்கள் | மோட்டார் பம்புகள் |
|---|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | 125, | 75, | 250, | 281, | 31, |
| மயிலாடுதுறை | 85, | 70, | 164, | 57, | 34, |
| திருவாரூர் | 125, | 18, | 142, | 73, | 18, |
| தஞ்சாவூர் | 59, | 29, | 69, | 711, | 42, |
| கடலூர் | 242, | 51, | 28, | 104, | 58, |
| சென்னை | 96, | 120, | 130, | 118, | 1686, |
| செங்கல்பட்டு | 102, | 116, | 83, | 245, | 114, |
| திருவள்ளூர் | 83, | 317, | 81, | 154, | 206, |
| காஞ்சிபுரம் | 276, | 10, | 30, | 43, | 250, |
| **மொத்தம்** | **1193,** | **806,** | **977,** | **1786,** | **2439** |

**மீட்புப் படை**

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி ஏற்கனவே நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு பேரிடர் மீட்புப் படைகள் அனுப்பப்பட்டுள்ள நிலையில், இன்று (29.11.2024) செங்கல்பட்டு மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்புப் படையின் 1 குழுவும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 2 குழுக்களும், விழுப்புரம் மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் தலா 1 குழுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**மீனவர்கள்**

மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க மீன்வளத் துறை இயக்குநருக்கும், கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கும் 23.11.2024 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரையில் மீன்பிடிக்கச் சென்ற 4153 படகுகள் கரை திரும்பியுள்ளன.

**கண்காணிப்பு அலுவலர்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதுமட்டுமின்றி, நேற்று (29.11.2024) செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.




தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட விழிக்கண் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர்

மாண்புமிகு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின்

48வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கீழ்கண்ட பட்டியல் படி நிகழ்ச்சிகள் நடைபெறும் என திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாவட்ட கழகச் செயலாளர் **இல.பத்மநாபன்** அறிவிப்பு

**பிறந்தநாள் நிகழ்ச்சிகள் விபரம் :**

| வ.எண். | ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் | நிகழ்ச்சியின் பெயர் | நிகழ்ச்சி நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| **நாள் : 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 1. | திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக சார்பில் | மாபெரும் ரேக்ளா பந்தயம் | இராமச்சந்திராபுரம் அணிக்கடவு |
| **நாள் : 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை 101–தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி** | | | |
| 1. | தாராபுரம் நகரம் | 30 வார்டுகளில் உள்ள 48 கொடி கம்பங்களில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்குதல் மற்றும் நகரில் உள்ள குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லங்களில் உணவு வழங்குதல். | தாராபுரம் நகரம் |
| 2. | மூலனூர் பேரூர் | 4வது வார்டு பொது மக்களுக்கு இரவு 150 நபர்களுக்கு உணவு வழங்குதல். | மேட்டுப்பட்டி, அர்ச்சுண காலனி |
| **102–காங்கேயம் சட்டமன்ற தொகுதி நாள் : 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 4. | வெள்ளக்கோவில் நகரம் | மாபெரும் இரத்ததான முகாம் மற்றும் விளையாட்டு வீரர் வீராங்களைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல். | பொன்னுச்சாமி கவுண்டர் திருமண மண்டபம், வெள்ளக்கோவில். |
| 5. | வெள்ளக்கோவில் நகரம் | அரசு மருத்துவமனையில் பிறந்த மூன்று குழந்தைகளுக்கு ரூ. 2500 மதிப்பில் பேபி கிட் வழங்குதல் | அரசு மருத்துவமனை, வெள்ளக்கோவில். |
| 6. | சென்னிமலை பேரூர் | 200 மகளிர பங்குபெறும் கோலப்போட்டி | பேரூர் கழக அலுவலகம், சென்னிமலை. |
| 7. | சென்னிமலை பேரூர் | 200 மரக்கன்றுகள் நடுதல் | அம்மாபாளையம் |
| **நாள் : 03.12.2024 செவ்வாய்க்கிழமை** | | | |
| 8. | குண்டடம் கிழக்கு ஒன்றியம் | அரசு ஆரம்ப பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு படிப்பு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்குதல். | எல்லப்பாளையம் புதூர் |
| **நாள் : 04.12.2024 புதன்க்கிழமை** | | | |
| 9. | குண்டடம் கிழக்கு ஒன்றியம் | அரசு ஆரம்ப பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு படிப்பு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்குதல். | குருக்கம்பாளையம் |
| **நாள் : 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 10. | சென்னிமலை பேரூர் | 66 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல். | சமுதாய நலக்கூடம், சென்னிமலை. |
| **நாள் : 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 11. | வெள்ளக்கோவில் ஒன்றியம் | மாபெரும் பொது மருத்துவ முகாம். | சிவசெல்வி மஹால், மேட்டுப்பாளையம். |
| **125–உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி நாள் : 06.12.2024, 07.12.2024, 08.12.2024 (வெள்ளி, சனி, ஞாயிறு)** | | | |
| 1. | குடிமங்கலம் வடக்கு ஒன்றியம் | மாபெரும் கிரிக்கெட் போட்டி | அரசு பள்ளி மைதானம், பெதப்பம்பட்டி. |
| **நாள் : 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 2. | குடிமங்கலம் வடக்கு ஒன்றியம் | ஒன்றியக் கழகத்திற்குட்பட்ட 8 ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் மக்களுக்கு மதியம் அசைவ உணவு வழங்குதல். | ஒன்றியக் கழகத்திற்குட்பட்ட 8 ஊராட்சிகள். |
| **நாள் : 14.12.2024 சனிக்கிழமை** | | | |
| 3. | குடிமங்கலம் கிழக்கு ஒன்றியம் | மாபெரும் குதிரை பந்தயம் | ஆமந்தகடவு சாலை, பெரியபட்டி. |
| **நாள் : 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 4. | குடிமங்கலம் கிழக்கு ஒன்றியம் | மாபெரும் ரேக்ளா பந்தயம் | ஆமந்தகடவு சாலை, பெரியபட்டி. |
| **126–மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி நாள் : 30.11.2024 சனிக்கிழமை** | | | |
| 1. | மடத்துக்குளம் மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றியங்கள் | மாபெரும் இரத்தான முகாம் மற்றும் சோழமாதேவி கிளைக்கழகத்தின் சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | அரிமா அரங்கம், மடத்துக்குளம். |
| **நாள் : 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| 2. | உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம் | 80 அணிகள் பங்கு பெறும் மாபெரும் கிரிக்கெட் போட்டி | பூலாங்கிணறு |
| **நாள் : 07.12.2024 சனிக்கிழமை** | | | |
| 3. | உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம் | கணக்கம்பாளையம் ஊராட்சியில் உள்ள 50 தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்குதல். | ஊராட்சி மன்ற அலுவலம், கணக்கம்பாளையம். |
| 4. | உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம் | கணக்கம்பாளையம் ஊராட்சிமன்ற தலைவரின் சொந்த நிதி ரூ. 7.26 இலட்சம் மதிப்பீட்டில் குப்பை அள்ளும் பேட்டரி வண்டியை ஊராட்சிக்கு வழங்குதல். | ஊராட்சி மன்ற அலுவலம், கணக்கம்பாளையம். |

**இல.பத்மநாபன்**

4ம் மண்டல தலைவர் – திருப்பூர் மாநகராட்சி

மாவட்ட கழகச் செயலாளர்

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.